www.padippakam.com

# சிறுவர் அமுதம்

ஆனி 92

15.06.1992

கிண்ணம் 3    எண்ணம் 6

13/06/92



CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை



பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

'' மகாகவி சுப்பிரமணிய பாரதி''

அன்புச் சிறுவர்களே,

நீங்கள் அடிக்கடி கேட்கும் வார்த்தையில் ''சத்தம் போடாதீர்கள்'' என்பது முக்கியமானது. சந்தோசம் ஆரவாரம் ஏற்படும் போது எம்மை அறியாமலே சத்தம் போடுகின்றோம். வெளிநாட்டில் வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் உங்களுக்கு ஏதாவது கொண்டாட்டம் என்றால்... சொல்லவே தேவையில்லை.

சத்தம் காதைச் செவிடாக்கி விடும். சத்தத்தில் ஒரு குறிப்பிட்ட அளவைத்தான் காதால் தாங்கிக் கொள்ள முடியும். காதுக்குக் கேட்க இசைவாக இருக்கின்ற ஒலிகள் எல்லாம் இசை எனப்படுகின்றன. காதுக்கு எரிச்சல் தரக் கூடியவை எல்லாம் இரைச்சல் என்று சொல்லப் படுகின்றன.

இந்த வேறுபாடுகள் கேட்பவரின் மன நிலையைப் பொறுத்திருக்கின்றன. முதியவர்களுக்குக் காட்டுக் கத்தலாக இருக்கின்ற டிஸ்கோ ஒபிசாக்கள் இளைஞர்களுக்கு இன்பத் தேனாக இருக்கின்றது. அறிவியல் அகராதியில் இரைச்சல் என்பது அவசியமில்லாத விருப்பத்தகாத தொந்தரவு செய்கின்ற ஓசைகளின் தொகுப்பு எனப்படும்.

www.padippakam.com

இரைச்சல் காரணமாக காதுக்குள் உள்ள மென்மையான நுட்பமான பகுதிகள் சோர்வடைகின்றன. அதனால் சத்தத்தைக் கேட்காமல் இருக்கச் செயற்கையான தடைகளை ஏற்படுத்துகின்றது. இரைச்சல் தொடர்ந்து கொண்டே இருக்குமானால்... காது தடை போட்டுக் கொண்டேயிருக்கும். இந்தத் தடை தொடர்ந்து கொண்டால்?? காலகதியில் காது கேளாமலே போய்விடும்.

பார்த்தீர்களா? சத்தம் போட வேண்டாம் என்று சொல்வதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது. இப்படிக் காது தடை போட்டுக் கொண்டிருக்கும் போது எரிச்சல் ஆத்திரம் என்பன இருக்கும். இதுதான் முதியவர்கள் சத்தம் போட வேண்டாம் என்று சொல்லுகின்றார்கள். இதுதான் இங்கு அருகில் உள்ள வீட்டுக்காரர்களும் சத்தம் போட வேண்டாம் என்று சொல்கிறார்கள். அமைதியான வாழ்க்கை எல்லா வழிகளிலும் சிறந்தது. சத்தம் போட்டு மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்க யாராவது விரும்புவார்களா?

அன்புடன்,
ஆசிரியர் ''சிறுவர் அமுதம்''

சென்ற மாதத்திலிருந்து சிறுவர் அமுதத்தை உங்களிடம் சேர்ப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள ''ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு (DRK) எமது நன்றிகள்.



படிப்பகம்

# எல்லாம் நன்மைக்கே!

அரசர் ஒருவரிடம் ஓர் அமைச்சர் இருந்தார். அமைச்சர் அடிக்கடி ''எல்லாம் நன்மைக்கே'' என்று அடிக்கடி சொல்லி வந்தார். அரசர் ஏதும் கவலையுடன் இருந்தாலும் ''எல்லாம் நன்மைக்கே'' என்றுதான் அமைச்சர் சொல்லி வந்தார். எதற்கும் இதையே சொல்வதால் அரசருக்குக் கேட்டுக் கேட்டுச் சலித்துவிட்டது. இதை விட வேறு வார்த்தை உனக்குத் தெரியாதா? என்று அரசரும் கேட்டுப் பார்த்தார். ஆனால் அமைச்சர் இதையே எல்லாவற்றிற்கும் சொல்லி வந்தார்.

ஒருநாள் அரசரின் கையில் வாள் வெட்டி விட்டது. விரலில் ஊனம் ஏற்பட்டு விட்டதால் அரசர் மிக மிக வருந்தினார். தன்னை அமைச்சர் வந்து பார்க்கவில்லை என்று அரசருக்குக் கவலையாக இருந்தது. அரசரிடம் அமைச்சர் வந்தார். அரசர் தனது கையில் ஏற்பட்ட காயத்தை அமைச்சருக்குக் காட்டினார். அதைப் பார்த்ததும் அமைச்சர் ''எல்லாம் நன்மைக்கே'' என்று சொன்னார். அரசருக்குக் கோபம் வந்தது. இதற்கும் விளையாட்டுத்தானா? எனது கையில் காயம் ஏற்பட்டிருப்பது எப்படி நன்மையாகும்? அமைச்சரைச் சிறையில் அடைத்து வைக்குமாறு அரசர் கட்டளை இட்டார். அப்பொழுதும் அமைச்சர் எல்லாம் நன்மைக்கே என்று சொல்லிச் சென்றார்.

சில நாட்களின் பின்னர் அரசர் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றார். காட்டு வழியில் இடம் மாறி, காட்டின் வேறு பக்கம் சென்று விட்டார். தனது உதவியாளர்களும் வராததால் அரசர் கொள்ளைக் கூட்டத்திடம் சிக்கிக் கொண்டார். கொள்ளைக் கூட்டத் தலைவன் பலிகொடுக்க ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தான். அரசர் அழகாக இருந்ததால் அவரைப் பலிகொடுக்க ஒழுங்குகள் செய்தான்.



அரசரின் கால்கள் கட்டப்பட்டன. கைகள் கட்டப்பட்டன. பெரிய வாளுடன் இருவர் வந்தனர். ஒருவன் வாளை ஓங்கினான். அப்பொழுது பக்கத்தில் நின்றவன் அரசரின் கையில் ஊனம் இருப்பதைக் கண்டு; கையில் ஊனம் இருக்கின்றது. ஊனமுள்ளவனைப் பலி கொடுத்தால், காளிக்குக் கோபம் வரும் என்று சொன்னான். கொள்ளைக் கூட்டத் தலைவன் அரசனை விட்டு விடும்படி கட்டளையிட்டான். அரசர் விடுவிக்கப்பட்டார். தனது விரலில் வெட்டுக் காயம் ஏற்பட்டபோது அமைச்சர் எல்லாம் நன்மைக்கே என்று சொன்னார். அது உண்மை! நான் நிரபராதியான அமைச்சரைக் குற்றவாளி என்று தண்டனை வழங்கி விட்டேனே! என்று வருந்திக் கொண்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

சிறையில் இருக்கும் அமைச்சரிடம் நேரே சென்று 'அமைச்சரே தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். எனது கையில் காயம் ஏற்பட்ட போது எல்லாம் நன்மைக்கே என்று சொன்னீர்கள் அதன் உண்மையை இன்று தான் தெரிந்து கொண்டேன் என்று நடந்த விபரம் எல்லாம் சொன்னார்,அமைச்சரை விடுதலை செய்து விருந்திற்கு அழைத்துச் சென்றார்.

*** அறுவைச் சிகிச்சை முடிந்ததும் தைக்கின்ற நூல் எதிலிருந்து பெறப்படுகின்றது?
நண்டின் கோதிலிருந்து பெறப்படுகின்றது.:.

www.padippakam.com

# பொய் பேசாதவன்

மருதநாட்டு அரசன் பிரச்சினையான கேள்விகளைக் கேட்டு, அவற்றிற்குச் சரியான விடை சொல்பவர்களுக்குப் பெரும் பரிசு வழங்கி வந்தான்.

ஒருநாள் அரண்மனை அவையில்... "இந்த உலகத்தில் எல்லா மனிதர்களுமே ஏதோ ஒரு வகையில் பொய் பேசிக் கொண்டு தான் இருக்கின்றார்கள். நல்லவர்களும் இதிலிருந்து தப்புவதில்லை. சிலநேரங்களில் மற்றவர்களின் மனம் புண்படக் கூடாதே என்பதற்கும் சிலர் பொய் பேசுகின்றார்கள். எந்த நிலையிலும் பொய் சொல்லாத ஒருவனை யாராவது எனக்குக் காட்ட முடியுமா?" என்று அரசன் சபையோரைப் பார்த்துக் கேட்டான்.

அதைக் கேட்டதும் சபையில் உள்ளோர் எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துத் தங்களுக்குள் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டார்கள். இன்னும் சிலர் யோசனை செய்த வண்ணம் இருந்தார்கள். சிலர் திரு திருவென முழித்துக் கொண்டிருந்தனர். அதேவேளை சபையிலிருந்த சிறுவன் ஒருவன் எழுந்து நின்று ''அரசே, எனக்குச் சிறிது அவகாசம் கொடுங்கள் நான் அப்படிப்பட்ட ஒருவரை அழைத்து வருகின்றேன்'' என்றான். அதைக் கேட்ட சபையில் உள்ள புலவர்கள், அறிஞர்கள், கற்றோர் என்று எல்லோரும் ஆச்சரியப் பட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



சிறுவன் அரசனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வெளியே சென்றான். எல்லோரும் சிறுவனின் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் சிறுவன் ஒருவனை அழைத்துக் கொண்டு வந்தான்.

அழைத்து வந்தவனை அரசன் முன் நிறுத்தி ''அரசே இவன் ஒரு பிறவி ஊமை! இவன் தான் பொய் பேசாதவன். ஏனென்றால் இவனால் பேசவே



படிப்பகம்

முடியாது! என்றான். ஊமையும் பேப்பே என்று ஏதோ சைகை காட்டினான். இதைக் கண்ட அரசனும் சபையோரும் சிறுவனின் புத்திக் கூர்மையைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். மகிழ்ச்சி அடைந்தனர். அரசனும் பெரும் மகிழ்ச்சி கொண்டு பெரும் பரிசுகளைச் சிறுவனுக்கு வழங்கினான்.

ஆக்கம்: செல்வி ராதிகா - லக்ஸ்மணன்
5014 KERPEN - SINDORF

*** இரைச்சல் மனதைப் பாதிக்கின்றது. அமைதியான வாழ்க்கை நீண்ட ஆயுளைத் தருகின்றது.

*** இன்று பிளாஸ்டிக் குப்பைகள் பெரிய பிரச்சினையாக உள்ளது. பிளாஸ்டிக் குப்பைகளைக் கரியாக்குகின்ற கிருமிகளை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

*** ஆழ்கடலில் வாழுகின்ற ஸ்கிரீன் என்ற மீன்களில் பெண் மீனுக்கு முதுமையைப் பற்றிக் கவலையே இல்லை! முதுமை வந்ததும் அது ஆணாக மாறி விடுகின்றது.

*** வெயில் என்று கவலைப்பட வேண்டியதில்லை. வெயிலில் திரிவதால் உயிர்ச்சத்து டி கிடைக்கின்றது.

உயிர்ச்சத்து டி உடலில் இருந்தால் தான் எலும்பின் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் வேண்டிய கல்சியம் பொஸ்பரசு என்பவற்றை உட்கவர முடியும்.

www.padippakam.com

# உலக அதிசயங்கள்

## தொங்கு தோட்டம்

இன்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாபிலோன் நாட்டை நெபோபாலசர் என்னும் அரசன் ஆண்டு வந்தான். இந்த அரசன் அயல் நாடுகள் மீது படை எடுத்து வெற்றி பெற்றான். அசீரியா என்ற அயல் நாட்டின் மீதும் படை எடுத்தான். அசீரியா பாபிலோனியாவின் கீழ் வந்தது. அசீரியாவின் தலைநகரான நினேவா அழிந்தது.

தனது படை வீரர் ஈட்டிய வெற்றியை பாபிலோனிய அரசன் வெகு சிறப்பாகக் கொண்டாடினான். இந்த வெற்றிக்கு ஒரு நினைவுச் சின்னம் வைக்க விரும்பினான். இந்த நினைவுச் சின்னம் எந்தக் காலத்திலும் அழியாமல் இருக்க வேண்டும் என விரும்பினான். இதே சிந்தனையிலே அரசன் இருந்தான். ஆனால் இந்த எண்ணம் நிறைவேறாமல் அரசன் இறந்து போனான்.




படிப்பகம்

www.padippakam.com


அவனுக்குப் பின்னர் அவனது மகன் நெபுசெட் நெசார் அரசனானான். தனது தந்தையின் எண்ணம் நிறைவேறாமல் தந்தை இறந்து போனதை நினைத்து வருந்தினான். தனது தந்தை நினைத்ததற்கும் மேலாகப் பாபிலோன் நகரைச் சொர்க்கபுரியாக மாற்ற விரும்பினான். எவராலும் கொள்ளையிட முடியாத கோட்டை கொத்தளங்களை அமைத்தான். ஆற்றையும் கோட்டைகளையும் இணைத்துப் பாலம் அமைத்தான். ஆனாலும் இவனது மனம் நிறைவு காணவில்லை.

இதன் விளைவாகவே உலகப் புகழ் பெற்ற தொங்கு தோட்டம் உருவானது. இந்தத் தொங்கு தோட்டம் உருவானதற்கு இன்னொரு காரணமும் இருக்கின்றது. நெபுசெட்நெசாரின் அபிமானத்திற்குரிய இராணி கலையுள்ளம் படைத்தவள். அசீரியாவை வெற்றி கொள்ள உதவிய அரசன் ஒருவனின் மகள் அவள். மிகுந்த கற்பனை உள்ளவள்.



Pieter Brueghel der Ältere: »Turmbau zu Babel«


படிப்பகம்




வானத்தில் அந்தரத்தில் மரங்களும் பூஞ் செடிகளும் சோலைகளுமாக இருந்தால் எப்படி? என்று கற்பனை செய்தாள். தனது கற்பனையை அரசரிடம் சொன்னாள். ஆயுதமும் அடிமைகளும் இருந்ததால் அரசன் ''உனது கற்பனையை நேரிலே காண்பாய்'' என்றான்.

அரசியின் விபரீதமான கற்பனையை நிறைவு செய்யும் விதத்திலே இந்தத் தொங்கு தோட்டம் அமைக்கப் பட்டது. மாடிகள் பல அடுக்கில் அமைக்கப் பட்டன. அங்கே மரங்களும் செடி கொடிகளும் நாட்டப்பட்டன. பல அடுக்கு மாடிகளில் மரங்கள் செடிகளுக்குத் தினமும் மாலை நேரங்களில் தண்ணீர் ஊற்றப்பட்டது. இதற்குப் பல ஆயிரம் அடிமைகள் பயன் படுத்தப் பட்டனர்.

ஆற்றிலிருந்து நீரை மாடிகளுக்கு அடிமைகள் எடுத்துச் செல்லும் கொடுமையான காட்சியைக் "கண்கொள்ளாக் காட்சி" என்று அரசன் வருணித்தான். ஓர் அரசியின் மனதை மகிழ்விக்கப் பல்லாயிரம் மனிதர்களைக் கொடுமைப் படுத்திக் கட்டிய தொங்கு தோட்டம் நீண்ட காலம் நிலைக்கவில்லை.

www.padippakam.com





திடீரென ஒரு நாள் எவரும் எதிர்பாரா வண்ணம், அசீரியா எதிரிகளின் வசமானது. அதைத் தொடர்ந்து பாபிலோனியாவும் வீழ்ந்தது. பாபிலோனியா விழுந்த பின்னர் தொங்கு தோட்டம் நிலைத்திருக்குமா? எதிரிகள் அதனையும் தகர்த்தெறிந்தனர். ஆயிரக்கணக்கான மனிதர்களின் கடின உழைப்பில் உருவான இந்தத் தொங்கு தோட்டம் போர் என்ற கொடுமையால் அழிந்தது. இன்று பாபிலோனியாவில் பெயருக்குத்தான் ஒரு தொங்கு தோட்டம் இருக்கின்றது. கொடுமைகளால் ஏற்படுத்தப்படும் எதனையும் வரலாறு விட்டு வைப்பதில்லை!

இதில் பாபிலோனியா என்பது இன்றைய ஈராக் நாடாகும். பாபிலோன் இதன் தலைநகராக இருந்தது. பாக்தாத் நகரின் தெற்கே 88 கிலோ மீற்றர் தொலைவில் இது இருந்தது. யூப்பிரட்டீஸ் நதியின் இடது பக்கத்தில் இருந்தது. அசீரியா என்பது இன்றைய சிரியாவின் ஒரு பகுதியாகவும் சவுதி அரேபியாவின் ஒரு பகுதியாகவும் இருந்தது. தைக்ரீஸ் நதியின் வளத்தில் இருந்தது.

(அடுத்த இதழில் பாரசிகத்தில் உள்ள ''மௌசோலியம்'')

w.padippakam.com





நல்ல பண்டங்களைக் கண்டறியோம் – ஒரு
நாளும் வயிறார உண்டறியோம்
அல்லும் பகலும் அலைந்திடுவோம் – பசி
ஆற வழியின்றி வாடிடுவோம்

அன்னப்பால் காணாத ஏழைகட்கு – நல்ல
ஆவின் பால் எங்கே கிடைக்குமம்மா!
என்னம்மா யாம்படும் பாட்டையெல்லாம்– சென்று
யாரிடம் சொல்லி அழுவோம் அம்மா!

இட்டெலி ஐந்தாறு தின்றோம் என்பீர் – நீங்கள்
ஏதும் கருணையிலீரோ? அம்மா
பட்டினியாக இறந்திடினும் – நாங்கள்
பாவம் பழி செய்ய மாட்டோம், அம்மா!

தேயிலை தேயிலை என்பீர் அம்மா! – இது
தேக்கிலை தானோ தெரியாதம்மா!
வாயும் வயிறும் நிறைந்திடுமோ! – இதில்
வைத்த அமுதம் திகைந்திடுமோ?

காப்பி காப்பியென்று கத்துவீரே – அதைக்
கண்ணிலே கண்டதும் இல்லையம்மா!
சாப்பிடற் கேற்ற உணவிதுவோ? அன்றிச்
சட்டையோ தொப்பியோ கூறும் அம்மா!



படிப்பகம்

www.padippakam.com

ஆனி ஆடிமாதக் கொந்தலிலே - மந்தை
ஆடுகள் போலக் கொடுகி நிற்போம்,
வேனிலில் வெந்துடல் வேர்த்திடவே -வெயில்
வேளை அலைந்து திரிந்திடுவோம்''.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

இந்தப் பாடல் ஏழைகளின் துயரத்தைக் காட்டுகின்றது. இருப்பவர் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். நாங்களும் அவதியுறும் எங்கள் நாட்டு மக்களின் துயரங்களுக்குக் கை கொடுக்க எம்மால் முடிந்த அளவு உதவுவோம்.

சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி என்று பாராட்டப்படும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தென்னிந்தியாவில் கன்னியா குமரி மாவட்டத்தில் புத்தேரி என்னும் ஊரில் பிறந்தவர்.

எளிய வாழ்வு இரக்க சிந்தை என்பன இவரது சிறப்பான குணங்களாக இருந்தன. இளமையிலே கவிதை பாடுவதில் வல்லவராக விளங்கினார்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா! அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனனேயடா!

என்று பாரதியின் பாடலைப் புகழ்ந்த கவிமணியின் பாடலை நாமக்கல் கவிஞர்

தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பதெம் செவிப் பெருமை

என்று பாராட்டுகின்றார்.




படிப்பகம்

# முல்லா கதைகள்

முல்லா நசிருதீன் ஒரு சிறந்த மேதை. அவருடைய கதைகளில் நல்ல கருத்துகள் இருக்கும். நகைச்சுவையுடன் நல்ல கருத்துகளைத் தரும் முல்லாவின் கதைகள் உலகப் புகழ் பெற்றவை. ஒவ்வொரு நாட்டின் நாடோடிக் கதைகளிலும் முல்லாவின் கதைகள் சில கலந்துள்ளன.

முல்லா என்பது இஸ்லாமிய சமய குருவைக் குறிக்கும் சொல்லாகும். பொதுவாக முல்லா என்பது நசிருதீனையே குறிப்பதாக உள்ளது. முல்லா நசிருதீனைத் தம் நாட்டவர் என்று பலர் கொண்டாடினாலும் துருக்கி நாடே அவரது தாயகம் எனக் கொள்ள முடியும். அங்கேயே அவரது சமாதி காணப்படுகின்றது.

முல்லா பல நாடுகளில் வாழ்ந்திருக்கின்றார். இதை வைத்தே பலர் தமது நாட்டவர் என்று சொல்லுகின்றார்கள். டாக்டர் பூவண்ணன் எழுதிக் கங்கை புத்தக நிலையம் வெளியிட்டுள்ள ''பிள்ளைகளுக்கு முல்லா கதைகள்'' என்ற புத்தகத்திலிருந்து நன்றியுடன் இந்தக் கதைகளை வெளியிடுகின்றோம். முல்லாவின் கதைகள் ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வரும். முதலாவது பகுதி இந்த மாதம் தொடர்கின்றது



## தங்கக் காசும் செப்புக் காசும்

பொதுமக்கள் குளிப்பதற்காக நகரங்களில் குளிக்கும் இடங்கள் உண்டு. அப்படியான இடம் ஒன்றிற்குள் முல்லா நுழைந்தார்.

முல்லா அப்போது அழுக்கான எளிய உடை அணிந்திருந்தார். அதைப் பார்த்த வேலைக்காரர் முல்லாவை அலட்சியமாகப் பார்த்தார்கள். அவ்வாறே நடந்து கொண்டனர். கையால் பிடிக்க முடியாத சிறு துண்டு சவர்க்காரத்தைக் கொடுத்தார்கள். ஈரம் துடைக்க அழுக்கான சிறு துவாயும் கொடுத்தார்கள்.

முல்லா இது பற்றிக் கவலைப்படவில்லை. முகம் சுளிக்கவில்லை. முறைப்பாடு எதுவும் செய்யவில்லை.

அமைதியாகச் சென்று குளித்து விட்டு வந்தார். வேலைக்காரர் இருவருக்கும் ஆளுக்கு ஒரு தங்க நாணயம் அன்பளிப்பாகக் கொடுத்து விட்டுப் போனார்.

தங்க நாணயத்தைப் பெற்ற வேலைக்காரர் திகைத்துப் போனார்கள். அடடா! இவர் இப்படிப்பட்டவர் என்று தெரியாமல் அலட்சியப்படுத்தி விட்டோமே! நாம் அலட்சியப் படுத்தியதற்கே தங்க நாணயம் தந்திருக்கின்றார் என்றால்?? நன்றாகக் கவனித்திருந்தால் ஐந்து அல்லது ஆறு தங்க நாணயங்கள் தந்திருப்பார். ஏமாந்து விட்டோமே என்று வருந்தினார்கள்.



சிலநாட்களுக்குப் பின்னர் முல்லா அதே குளியல் இடத்துக்குச் சென்றார். அவரைப் பார்த்ததும் வேலைக்காரர் அடையாளம் கண்டு கொண்டனர். முல்லாவிடம் ஒடோடி வந்து முகம் மலர வரவேற்றுப் பெரும் உபசரணைகள் செய்தார்கள். வாசனை வீசும் உயர்ந்த ரக சவர்க்காரம் குளியல் எண்ணெய் வகைகள் என்பவற்றுடன் உயர்ந்தரக வெள்ளைத் துவாயும் கொடுத்தார்கள். பூசிக் குளிக்க வாசனைப் பொருட்களும் நிறையக் கொடுத்தார்கள்.

முல்லா நன்றாக அனுபவித்துக் குளித்தார். குளித்து முடிந்ததும் உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டார். வேலைக்காரர் இருவரும் இம்முறை அதிக வெகுமதி கிடைக்கும் என்று முல்லா முன் வந்து நின்றனர். முல்லா இருவருக்கும் ஆளுக்கு ஒரு செப்புக் காசு கொடுத்தார். இந்தச் செப்புக் காசுகள் சென்ற முறை என்னைக் கவனித்தீர்களே அதற்காகத் தந்தேன். சென்ற முறை தந்தது இன்றைக்குக் கவனித்தீர்களே! அதற்காக என்று சொன்னார். வேலைக்காரர் வெட்கித் தலை குனிந்து கொண்டார்கள்.

(அப்பாவும் மகளும் தொடர்... அடுத்த இதழில் தொடர்ந்து இடம் பெறும்)

# வினாவிடைப் போட்டி

இந்த மாத வினாவிடைப் போட்டிக்குரிய சில விடைகள் இந்த இதழில் நேரடியாக இல்லாமல் இருக்கின்றன. உங்களுக்கு உதவியாக இருக்கும்.

1) ''தங்கத் தாத்தா'' என அழைக்கப்படும் சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணத்தின் எந்த ஊரைச் சேர்ந்தவர்

2) Zeitung என ஜேர்மன் மொழியில் உள்ள சொல்லைத் தமிழில் எப்படிச் சொல்லலாம்?
(ஆங்கிலத்தில் News paper)

3) பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களை எழுதுங்கள்.
முகவரி, இறைவன், தினம் சந்தோசம், மன்னன், சண்டை, ஆகாயம், பகைவர்கள், இல்லம், பள்ளிக்கூடம்
(உதாரணம்: தாய் = அம்மா இரண்டும் ஒரே கருத்தைத் தருகின்றன.

4) ஒன்றுக்கு மேற்பட்ட தொகையினரைக் குறிக்கும் சொல் ''பலர்பால்'' எனப்படும் என்பது உங்களுக்குத் தெரியும். உதாரணமாக மாணவன் என்பது ஒருவனையும் மாணவர்கள் என்பது பலரையும் குறிக்கின்றதல்லவா?
இதே போல பலரைக் குறிக்கும் சொற்கள் பத்து எழுதுங்கள்

www.padippakam.com

5) நான், நீ, என்பனவற்றை ஒருமை என்பது போலநாங்கள் நீங்கள் என்பவற்றை எப்படிச் சொல்லலாம்?

6) ஏதாவது பத்துச் சொற்களை எழுதி அவற்றின் எதிர்ச் சொற்களையும் எழுதுங்கள்.

விடைகளை 30.06.92 ற்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

விடைகளை எழுதியனுப்பும் தாளில் உங்களுடைய பெயர் விலாசம் உங்களுடைய பிறந்த திகதி என்பனவற்றையும் குறிப்பிட வேண்டும்.

அன்பான வேண்டுகோள்.

இந்த அமுதம் சஞ்சிகையை வாசிப்பதில் விளங்கிக் கொள்வதில் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் உதவியாக இருக்க வேண்டும். அவர்களை எழுதத் தூண்டிப் போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்யுங்கள். ஒவ்வொரு மாதமும் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்குப் புத்தகங்கள் பரிசாகக் கிடைக்கும்

ஆசிரியர்''சிறுவர் அமுதம்''



படிப்பகம்

## வினாவிடைப் போட்டி முடிவுகள்

1) ஐரோப்பாவில் பல தமிழ் வாரப் பத்திரிகைகள் வெளிவருகின்றன.
fபிரான்ஸ் நாட்டின் தலைநகர் பரிஸிலிருந்து ''பரிஸ் முரசு'' என்ற வாரப் பத்திரிகையும் fபிரான்ஸின் போபிக்னி (93000 BOBIGNY) நகரிலிருந்து ''பரிஸ் ஈழநாடு''என்ற வாரப் பத்திரிகையும் இங்கிலாந்தின் தலைநகரான லண்டனிலிருந்து ''தமிழன்'' என்ற வாரப் பத்திரிகையும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

2) ஜேர்மனியில் 7000 எண் சுற்காட் (Stuttgart) என்ற நகரைக் குறிக்கின்றது.

3) 2000ம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் ஜேர்மனியின் தலைநகர் பேர்ளினில் நடைபெறவுள்ளது.

4)'' செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே''
என்ற இந்தப் பாடலை பாரதியார் இயற்றினார்.

5) தமிழ்நாட்டில் பாரதியார் பாப்பாப் பாட்டுக்கள் பாடியது போல ஈழத்தில் தங்கத் தாத்தா என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாப்பாப் பாட்டுக்கள் பாடினார்.

6) இலங்கையின் மலைப் பிரதேசத்தில் அதன் உயர வேறுபாடுகளுக்கேற்ப அங்கு விளையும் பயிர்களும் வேறுபடுகின்றன. மலையின் உயரத்திற்கேற்ப பயிர்களின் பெயரும் தரப்படுகின்றன.
இறப்பர், கொக்கோ கோப்பி கித்துள் அன்னாசி கறுவா பியர்ஸ் தேயிலை என்பவற்றைக் குறிப்பிடலாம். தேயிலை அதி உயர்ந்த மலைப் பிரதேசப் பயிர் எனக் கொள்ளவும்.

வினாவிடைப் போட்டியில்.... ஈழத்தில் பாப்பாப் பாட்டுப் பாடிய புலவரின் பெயர் பலருக்குத் தெரியவில்லை.
இம்முறை பலர் கலந்து கொண்டாலும் சரியான விடைகளை மிகக் குறைந்த தொகையினரே எழுதியுள்ளனர்.

எல்லாம் சரியான விடைகள் எழுதியவர்கள் :
செல்வி.ஜெய்ப்பிரபா தியாகேஸ்வரன்
செல்வி.சுதர்சினி சந்திரதாஸ் 5600 Wuppertal 11
செல்வி.மேகலை மகேந்திரன் 4005 Meerbusch 2
செல்வி.பாமினி.த. 7200 Tuttlingen
செல்வி.கபிலினி தெய்வேந்திரன் 5650 Solingen 19
செல்வன்.ஜெனார்த்தன் குலம் 4053 Juchen 1
செல்வன்.ரமேஸ் சிவசுப்பிரமணியம் 4053 JUCHEN 1
செல்வன்.சிவகுமார் சிவசுப்பிரமணியம் 4714 Selm
செல்வன்.கஜன் தெய்வேந்திரன் 5650 Solingen 19
செல்வி.சிவதர்சினி சிவராஜா 4100 Duisburg 28
செல்வி.கேமா செல்வராஜா 5650 Solingen 19
செல்வி.தர்சினி செல்வராஜா 5650 Solingen 19
செல்வன்.சிவாஸ்கர் சிவராஜா 4100 Duisburg 28
செல்வன்.சிவரூபன் செல்வராஜா 5650 Solingen 19

www.padippakam.com

ஐந்து வினாக்களுக்குச் சரியான விடை எழுதியவர்கள் :

செல்வி.சோபனா சுந்தரலிங்கம் 5012 Bedburg/Erft
செல்வி.செல்வா கந்தவனம் N.9595 SORVAER NORWAY
செல்வி.தர்சினி கமலநாதன் 5650 Solingen 1
செல்வி.துஷாரா கிருஷ்ணகாந்தன் 4059 Juchen 1
செல்வன் லிங்காதரன் கமலநாதன் 5650 Solingen 1
செல்வன்.வினி கிருஷ்ணகாந்தன் 4059 Juchen 1
செல்வன்.கிரேசன் இம்மானுவேல் 5802 Wetter 4

ஐந்துக்குக் குறைந்த சரியான விடைகளைப் பலர் எழுதியுள்ளனர். எல்லோருக்கும் எமது பாராட்டுக்கள்.

டென்மார்க்கில் '' சஞ்சீவி''சிறுவர் மலர்

டென்மார்க்கில் சஞ்சீவி சிறுவர் மலர் வெளி வந்து கொண்டிருக்கின்றது. இந்தச் சிறுவர் மலரைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள...

CHANCHIVE
POSTBOX 1205
DK 7500 HOLSTEBRO
DANMARK

என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



# உலகைச் சிரிக்க வைத்த சார்லி

குடும்பத்தில் வறுமை கூடியது. வீட்டிலிருந்த பொருட்கள் எல்லாம் அடைவு வைக்கப் பட்டன. நிலைமை சீராக அவற்றை மீட்டுக் கொள்ளலாம் என எண்ணியவர்களுக்குப் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. பெரிய வீட்டிலிருந்து சிறிய வீட்டிற்கு மாறினார்கள். பின்னர் ஒரு சின்னஞ்சிறு அறையிலே தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தாயார் அன்னாவிற்குத் தையல் வேலை தெரிந்திருந்தது. தையல் இயந்திரம் ஒன்றைக் கடனாக வாங்கினார். வறுமைக் காலத்தில் தெரிந்திருந்த தொழில் கைகொடுத்தது. ஆனால் தையல் வேலை கிடைக்கவில்லை. கடனாகக் கொடுத்தவர் வந்து தையல் இயந்திரத்தைத் தூக்கிச் சென்றார். தாயார் நடனமாட வைத்திருந்த பட்டாடைகளையும் விற்றார்.

மூத்தவன் சிட்னி வைத்திருந்த கோட் கிழிந்து போனது. தாயார் தனது ஒரே கவுணைக் கிழித்துக் கோட்டாகத் தைத்துக் கொடுத்தார். இந்தக் கோட்டைச் சிட்னி அணிந்து சென்ற போது பாடசாலையில் சக மாணவர்கள் கேலி செய்தார்கள். சிட்னி அழுது கொண்டு வீட்டிற்கு வந்தான். ''கோட் அணியாமல் செல்வது பெரிய அவமானம் அல்லவா?'' என்று தாயார் சிட்னிக்குச் சமாதானம் சொன்னார்.



படிப்பகம்

www.padippakam.com



# சார்லி சாப்ளின்

இது போலவே சார்லியின் காற்சட்டை கிழிந்து போன போதும் தனது சட்டையைக் கிழித்துத் தாயார் காற்சட்டை தைத்துக் கொடுத்தார். சிட்னிக்கு நடந்தது போலவே சார்லிக்கும் கேலி நடந்தது. சிட்னிக்குச் சொன்னது போன்ற ஆறுதலே சார்லிக்கும் தாயார் சொன்னார்.

' சிட்னி பாடசாலைக்குப் போகின்ற நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில், செய்தித்தாள் விற்று வந்தான். இதனால் மிகச் சிறிய வருமானம் கிடைத்தது. இதைச் சார்லி தனது சுயசரிதையில் ''ஒரு வாளிக்குள் இது சிறிய துளியாக இருந்தாலும் அந்த நேரத்தில் இது பெரியதோர் ஆறுதலாக இருந்தது'' என்று எழுதியுள்ளார்.



படிப்பகம்

ஒரு நாள் செய்தித்தாள் விற்கச் சென்ற சிட்னி அவசரம் அவசரமாக ஓடி வந்தான். தனது கையிலிருந்த செய்தித்தாள்களைக் கீழே போட்டான். அதற்குள்ளிருந்த சிறு பெட்டியைத் தாயிடம் கொடுத்தான். தாயார் அதனைத் திறந்து பார்த்தார். சில நாணயங்கள் இருந்தன. அதற்குள் சிறு பை ஒன்றிற்குள் ஏழு தங்க நாணயங்கள் இருந்தன. தாயார் சிட்னிக்கு இது எப்படிக் கிடைத்தது? என்று வெருட்டிக் கேட்டார். சிட்னி தான் இதைக் களவெடுக்கவில்லை என்றும் பஸ் வண்டியில் யாரும் இல்லாத இடத்தில் கண்டெடுத்ததாக உண்மையைச் சொன்னான். இது யாருடையது? ஏதாவது விலாசம் இருக்கின்றதா? எனத் தேடிப் பார்த்தார்கள். எதுவும் கிடைக்கவில்லை. எமது கஸ்டத்தைப் போக்கவே கடவுள் இதைத் தந்திருப்பதாகத் தாயார் சொன்னார். இந்தக் கடவுளின் உதவியால் சில நாட்கள் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் பின்னர் கொடிய வறுமை ஏற்பட்டது. தந்தை அனுப்பிய பத்து சிலிங் உதவியும் நின்று விட்டது.

(இன்னும் வரும்)

உங்களின் கவனத்திற்கு!

---

உங்களின் உறவினர்கள் நண்பர்கள் யாராவது ஒருவரைச் சிறுவர் அமுதம் வாசகராகச் சேர்த்துத் தந்தால் உங்களுக்கு ஒரு கதைப் புத்தகம் பரிசாகக் கிடைக்கும். ஐந்து பேரைச் சேர்த்துத் தந்தால் ஐந்து புத்தகங்கள் பரிசாகக் கிடைக்கும். இந்தப் புத்தகங்கள் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டவை. உங்களுக்குப் பிடித்த நல்ல கதைப் புத்தகங்கள்

ஆசிரியர் ''சிறுவர் அமுதம்''

# தருமம் தலைகாக்கும்

## (உத்தமன் கதை)

வட இந்தியாவில் காசி என்ற நகரம் உள்ளது. அங்கே உத்தமநாதன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் பெரும் செல்வந்தர். ஒரு முறை முனிவர் ஒருவர் அவரிடம் சென்று ''மகனே இறைவன் உனக்கு ஏராளமான செல்வத்தை வாரி வழங்கியுள்ளான். அந்தப் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உதவு! இறைவனுக்கு விருப்பமானது அதுவே!'' என்றார்.

முனிவரின் அறிவுரையைக் கேட்ட உத்தமநாதன் அன்று முதல் ஏழைகளுக்கு உதவி செய்வதில் உத்தமரானார். பசியென்று வந்தவர்களுக்கு அன்னதானம் செய்தார். தருமம் செய்ய வேண்டும் என்ற எண்ணமே அவர் மனதில் நிலைத்து விட்டது.

உத்தமநாதன் வீட்டில் ஏராளமான செல்வம் இருப்பதை அறிந்த திருடர்கள் திருடுவதற்கு அவர் வீட்டிற்குச் சென்றார்கள். உத்தமனைக் கொலை செய்து முழுச் செல்வத்தையும் எடுத்துச் செல்லத் திட்டம் தீட்டினார்கள். சரியான நேரத்தை எதிர்பார்த்து அவர் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார்கள்.

www.padippakam.com



நள்ளிரவு நேரம் வந்தது. விளக்கை ஏற்றிக் கொண்டு உத்தமன் வீட்டு வாசலுக்கு வந்தார். வீட்டுத் திண்ணையில் ஐவர் படுத்திருக்கக் கண்டார். அவர்களை அன்போடு எழுப்பினார். பாலும் பழம் கொடுத்து உபசரித்தார். இவ்வளவு தரும சிந்தை கொண்டவரைக் கொலை செய்ய எண்ணியிருந்தோமே! இதைத் தெய்வம் பொறுக்குமோ? என்று நினைத்தார்கள். தமது எண்ணத்தை மாற்றி உத்தமனின் காலில் விழுந்து வணங்கி வந்த வழியே திரும்பிச் சென்றார்கள்.

உத்தமன் தருமம் செய்தார். அது அவரைக் காப்பாற்றியது. எமக்கு இந்த வசதியான வாழ்க்கையைத் தந்த இறைவனின் விருப்பமான ''இல்லாதவர்களுக்கு ஏழைகளுக்கு நாமும் உதவுவோம். எமது நாட்டில் அல்லற் படும் எமது

சகோதரர்களுக்கு நாமும் உதவுவோம்''

இந்தக் கதை பேராசிரியர் சாயபு மரைக்காயர் எழுதிய ''அறிவுரைக் கதைகள்'' என்ற நூலிலிருந்து நன்றியுடன் பிரசுரமாகின்றது.

# விடுகதைகள்

1) ஒரு கொட்டிலுக்குள் முப்பத்திரெண்டு வெள்ளைப் பசுக்கள் அது என்ன?

2) ஒற்றைக் கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை. அது என்ன?

3) ஒரு பக்கம் பல்லால் ஒன்றைப் பத்தாக்கும். அது என்ன?

4) ஒடும் ஆனால் இருக்கும் இடத்தை விட்டு அசையாது. அது என்ன?

5) கடல் நீரில் வாழ்கின்றான். மழை நீரில் மடிகின்றான். யார் அவன்?

6) கண்ணாடிக் குண்டு. கையால் தொட்டால் காணவே இல்லை. அது என்ன?

விடைகளை 30.06.92 முன்னர் அனுப்பி வைக்கவும்.

# எமது தாய்நாடு




எமது நாடு இலங்கை. இது இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப்படுகின்றது. எமது நாடு நீர்வளம், நிலவளம், மலைவளம், கடல்வளம் அனைத்தும் அமையப் பெற்ற எழிலான நாடாகும். இதன் புகழ் பாரெல்லாம் பரவிக்கிடக்கின்றது.

ஈழம், இரத்தினதுவீபம், தப்ரபேன் சிலோன் ஸ்ரீலங்கா எனப் பல பெயர் கொண்டு அழைக்கின்றனர். இங்கு சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் பறங்கியர் எனப் பல இனத்தவர்கள் வாழ்கின்றார்கள். பௌத்தம் சைவம் இஸ்லாம் கிறீஸ்த்தவம் என்பன இந்த நாட்டு மக்கள் பின் பற்றும் மதங்களாக உள்ளன.

இலங்கை கடலாற் சூழப்பட்டிருந்தாலும் இதன் மத்திய பகுதியில் உயர்ந்த மலைத் தொடர்கள் அமைந்துள்ளன. இந்த மலைத் தொடர்களில் பேதுறுதாலகால மலையே அதி உயரமான மலையாக உள்ளது. இம் மலைத் தொடர்களில் பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. இந்த நதிகளே எமது நாட்டை வளமுறச் செய்கின்றன.

www.padippakam.com



சில நதிகளிலிருந்து பெறுமதிமிக்க கனிப் பொருட்கள் அகழ்ந்தெடுக்கப் படுகின்றன. மகாவலி கங்கை எமது நாட்டின் மிகப் பெரிய நதியாகும். எமது நாடு விவசாய நாடாகும். தேயிலை இறப்பர் என்ற மலைநாட்டு விளை பொருட்களுடன் தெங்குப் பொருட்களும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

எமது நாடு விவசாய நாடாக இருந்த போதிலும் கைத்தொழில் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் முகமாகச் சீனித்தொழிற்சாலை சீமேந்துத் தொழிற்சாலை இரசாயனத் தொழிற்சாலை காகிதத் தொழிற்சாலை எனப்பல இருக்கின்றன.


மிக நீண்ட காலமாகக் கொழும்பு தலை நகராக இருந்து வந்திருக்கின்றது. தற்போது ஸ்ரீ ஜயவர்த்தனபுர தலைநகராக உள்ளது. திருகோணமலையின் இயற்கைத் துறைமுகம் கொழும்பின் செயற்கைத் துறைமுகம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும். காலி, காங்கேசன் துறை, மன்னார் என்பனவும் துறைமுகங்களாகும். கட்டுநாயக்காவிலுள்ள விமான நிலையம் சர்வதேச விமானநிலையமாக விளங்குகின்றது.

படிப்பகம்

www.padippakam.com

எமது நாட்டின் இயற்கை அமைப்பும் அதன் காலநிலையும் வெளி நாட்டவர்களைக் கவர்ந்திழுக்கின்றது. பல்லாயிரக்கணக்கில் உல்லாசப் பிரயாணிகள் இங்கு வந்து செல்கின்றார்கள். இதனால் எமது நாடு பெருந் தொகையான வருவாயைப் பெறுகின்றது.

ஆக்கம்: செல்வன் சிவகுமார் சிவசுப்பிரமணியம்
MEMELER STR 7,
4714 SELM



## சோம்பேறிகளின் கூச்சல்

========================

பாரம் நிறைந்த வண்டி. அதனை இரண்டு எருதுகள் வேகமாக இழுத்துச் சென்றன. குறுகிய காட்டுப் பாதையில் வண்டி சென்றது. பாதையில் மேடு பள்ளங்கள் இருந்தன. திடீரென்று வண்டிச் சக்கரங்கள் கிறீச் கிறீச் என்று சத்தம் போட்டன. கோபங்கொண்ட எருதுகள் சக்கரங்களைப் பார்த்து ''என்ன சத்தம் என்று கேட்டன.

நாங்கள் தானே எல்லாப் பாரத்தையும் இழுத்துச் செல்கின்றோம். எங்களுக்குத் தானே அந்த வலி தெரியும். வேதனை மிகுதியால் நாங்கள் கத்துகின்றோம் என்றன சக்கரங்கள்.



படிப்பகம்



இதைக் கேட்டதும் எருதுகளுக்குச் சிரிப்பு வந்தது. வண்டியை இழுக்கின்ற நாங்கள் அமைதியாக எங்கள் வேலையைச் செய்கின்றோம். சும்மா இருக்கின்ற சோம்பேறிகளான நீங்கள் கூச்சல் போடுகின்றீர்கள் என்று எருதுகள் சொல்லின.

எங்குமே வேலை செய்பவர்கள் அமைதியாக இருக்கின்றார்கள். சும்மா இருக்கின்ற; சோம்பேறிகளே கூச்சல் போட்டுத் தாமே வேலை செய்வதாகக் காட்டிக் கொள்ளுகின்றார்கள்)

ஒத்தகருத்துள்ள சொற்கள்

பொய்கை: குளம்/நீர்த்தடாகம்/ஏரி
அமைச்சர்: மந்திரி/ஆலோசகர்
வார்த்தை: சொல்
கட்டளை: உத்தரவு/ஆணை
நிரபராதி: குற்றமற்றவன்/சுற்றவாளி
அனுமதி: உத்தரவு
பரிசு: வெகுமதி/சன்மானம்

அயல்நாடு: பக்கத்து நாடு/அருகில் உள்ள நாடு
சிந்தனை: யோசனை

www.padippakam.com



## முடியுமா?

========


ஒரு காக்கை ஒரு நாள் அன்னப் பறவையைக் கண்டது. அன்னத்தைப் போல வெள்ளையான நீளமான சிறகு தனக்கில்லையே என வருந்தியது. அன்னம் அழகிய சிறகையும் வெள்ளை நிறத்தையும் பெற்றிருப்பதற்குப் பொய்கையே காரணம் என எண்ணியது.

தன் இனத்தை விட்டுப் பிரிந்து வந்தது. தனது உணவையும் வெறுத்தது. பொய்கையிலே வாழத் தொடங்கியது. நாள்தோறும் பொய்கையிலே குளித்ததால் காக்கைக்குத் தடிமன் வந்தது. காய்ச்சல் வந்தது. எப்படியும் அன்னத்தைப் போல மாறுவேன் என்ற பிடிவாதத்தில் பொய்கையிலே வாடியது.

சாப்பாடும் இல்லாமல் வருத்தத்துடன் சில நாளில் காகம் இறந்து விட்டது.

பிறப்பிலே கறுப்புக் காகமாகப் பிறந்தது வெள்ளை அன்னமாக முடியுமா?

# குறுக்கெழுத்துப் போட்டி




குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளுபவர்கள் தங்கள் எழுத்திலே எழுதி அனுப்ப வேண்டும்.

குறுக்கெழுத்துப் போட்டி மொத்தமாக 49 சதுரங்களைக் கொண்டதாக இருக்கும். அடைக்கப்பட்ட சதுரங்களுக்கும் இலக்கம் இருக்கும். இந்த முறை அடைக்கப்பட்ட சதுரங்களின் இலக்கங்கள் : 12 13 16 20 21 23 31 32 34 35 36 40 46

www.padippakam.com

## இடமிருந்து வலமாக வரும் சொற்கள்

---

1 ஈழத்தில் பாப்பாப் பாட்டுக்கள் பாடிய சோமசுந்தரப் புலவரை இப்படியும் அழைப்பர்.

8 வரவிற்கு அதிகமாகச் செலவு செய்தால் இதைப் பிடிக்கவே முடியாது. (இந்தச் சொல் குழம்பி உள்ளது)

17 சோற்றை அன்னம் என்றும் சொல்வார்கள். சிலர் இப்படியும் சொல்வார்கள்

24 முதல் 26 வரையுள்ள இந்த மூன்றெழுத்துச் சொல் வலமிருந்து இடமாக உள்ளது. கடவுளை இப்படியும் சொல்லாம்.

26 இது பழங்கால ஆயுதமாக இருந்து வந்தது. தற்போது எறிந்து விளையாடும் பொருளாக இருக்கின்றது. காட்டு வாசிகளிடம் இப்பொழுதும் இது இருக்கின்றது.

29 யாராவது ஏதும் சொல்லும் போது இப்படிச் சொல்லிச் சொல்லியே கேட்கின்றோம். இது நன்றாகத் தெரிந்த சொல் என்றாலும் 30 மேலிருந்து கீழ் வரும் சொல்லைக் கண்டு பிடித்ததும் வந்து விடும்.

37 பாரதியார் இயற்றிய புதிய ஆத்திசூடியில் ... இதில் ... தேர்ச்சி கொள் என்று எழுதியுள்ளார். உணவில் தண்ணீர் வடிவில் இருக்கும் ஒன்றையும் இப்படிச் சொல்லலாம்.

41 பிழை என்பதன் எதிர்ச் சொல் இதுவாகும்.



படிப்பகம்

43 நாய் குரைக்கும். காகம் கரையும் என்பது போல சேவல் குயில் என்பன....

47 இன்று எல்லோரும் இதையே விரும்புகின்றனர் (குழம்பி உள்ளது)

மேலிருந்து கீழாக வரும் சொற்கள்

---

1 தமிழ் ஈழம் என்பதைச் சேர்த்தெழுதும் போது இப்படி எழுத வேண்டும்.

2 இந்தச் சொல் கீழிருந்து மேலாகக் கடைசி எழுத்தில்லாமல் இருக்கின்றது. இது கோவில்களில்

இருக்கும். இது கடல் வாழ் உயிரினத்தின் சதை இல்லாத பகுதியாகும். இதை ஊதினால் சத்தம் வரும்.

3 நிலக்கடலையை இப்படியும் சொல்வார்கள் இதிலிருந்து எண்ணெய் பெறப்படுகின்றது.

4 இது போடக் கூடிய பொருளல்ல! ஆனால் இதைப் போட வேண்டாம் என்றுதான் சொல்லுகின்றோம். இதன் எதிர்ச் சொல் பொருக்கும் எதிர்ச் சொல்லாக வரும்.
(இந்தச் சொல் குழம்பி உள்ளது)

7 மீசை மேலே என்றால் கீழே இதுவென்று சொல்லலாம்.

19 இலங்கையை இப்படியும்/சொல்லலாம். இது குழம்பி இருச்கின்றது.

30 இதன் ஒத்தகருத்துச் சொல் இராக்காலம். எதிர்ச் சொல் பகல்.

38 கடைசி எழுத்தில்லை. ஒருவகைப் புல்லின் பெயர். நாவல் மரத்தையும் இது குறிக்கும்.

41 மரக்கறி வகைகளை இது செய்யாமல் சாப்பிடுவதே நல்லதாகும். ஒன்றைச் செய்வதையும் இப்படிச் சொல்லலாம்.

42 ஆணிகள் சிலவற்றிற்கு இது இருந்தால் அடித்து இறுக்க முடியாது. இதைப் பலமுறை சொன்னாலும் சிலருக்குப் ..வதில்லை.


குறுக்கெழுத்துப் போட்டியில் உள்ள எல்லாச் சொற்களும் ஒன்றோடொன்று எழுத்தில் தொடர்புள்ளதாக இருக்கின்றன. ஒன்றைக் கண்டு பிடித்து விட்டால் அடுத்து வரும் சொற்களைக் கண்டு பிடிப்பது எளிதாக இருக்கும். முயற்சித்துப் பாருங்கள்.

விடைகளை 30.06.92 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். விடைத்தாளில் உங்கள் பெயர் விலாசம் (முகவரி) என்பன எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விகள் இலகுவானவை. எழுத்துகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருப்பதால் எல்லாவற்றையும் வாசித்துத தெரிந்தவற்றை முதலில் எழுதவும். எல்லா விடைகளையும் உங்களால் எழுத முடியும்.

www.padippakam.com

SIRUVAR AMUTHAM No 30



Tel..02271/66527

இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழைவளம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை தென்னை பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடே

---

தொடர்புகளுக்கு:
SIRUVAR AMUTHAM
IM WINKEL - 2,
5013 ELSDORF/RHLD
GERMANY

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

KINDERFREUNDLICH MAGAZINE

RMH,